விச்வாவஸு ௵ ஆடி ௴
ஜூலை - ஆகஸ்ட் 2025

மலர்: 8
இதழ்: 4

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஸிக ஸந்தேஸம்

MONTHLY NEWSLETTER FROM:
SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com

ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்

விச்வாவஸு ௵ ஆடி ௴
ஜுலை - ஆகஸ்ட் 2025

ஸ்ரீ:

மலர்: 8
இதழ்: 4

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

தேஶிக ஸந்தேஶம்

திருக்கோவில் பூஜா காலங்கள் *

ஞாயிறு முதல் புதன் வரை

காலை

6.30 - விச்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

வியாழன் முதல் சனி வரை

6.00 - விச்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

தர்மகர்த்தாக்கள்:
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

Editorial Board :
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com

ஸ்ரீ:

ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

விச்வாவஸு ஆண்டின் தக்ஷிணாயனத்தின் முதல் மாதமான ஆடி மாதத்திற்கான அதிஷ்டான தேவதையாக வாமனன் திகழ்கிறார். இவர், முல்லைப் பூவைப் போன்ற வெளிர்ந்த நிறமும், தாமரைப்போல் நீண்ட கண்களும் கொண்டவர். கைகளில் சங்கம், கதை, சக்ரம், பத்மம் ஆகியனவற்றைத் தரித்திருப்பவர்.

நாமங்கையுடன் கூடிய நான்முகனின் யாகவேதியில் அவதரித்த நம் ஸர்வேச்வரனான பேரருளாளன், வாமனனாக, என் இடவயிற்றையும் வாயுவின் திசையான வடமேற்கையும் ஸ்தானமாகக் கொண்டு, உதித்த ஸூர்யனின் நிறத்துடன், அடியார்களை ஸம்ஸார ஸமுத்ரத்திலிருந்து கரை சேர்த்துத் தாரகமாய் இருந்து, சிவந்த வஜ்ராயுதங்களோடு ப்ரகாசிப்பதாக ஸ்வாமி தேசிகன் வாமனமூர்த்தியின் அழகை வர்ணிக்கிறார்.

ஆனையின் தூயரைப் புள்ளூர்ந்து காத்தளித்ததான கஜேந்த்ர மோக்ஷம், இந்த ஆடி மாதப் பௌர்ணமியன்று கொண்டாடப்படவுள்ளது. ஸ்வாமி தேசிகன், 'எல்லையற்ற ஜ்ஞானம், கருணை முதலிய மஹிமைகளை உடையவனும், நல்லவரிடம் நல்லெண்ணம் கொண்டவனும், அன்று கஜேந்திரனைக் காக்க ஓடிவந்தவனுமான அஷ்டபுஜத்து எம்பெருமானை, ஸம்ஸாரமாகிய முதலையின் வாய்ப்பட்ட கஜேந்த்ரனைப் போலவே நானும் சரணமடைகிறேன்' என்று ஆனையை காத்த ஹரியைச் சரணாகதி செய்கிறார்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் விட்டுசித்தரின் தூய திருமகளாக வந்து, அரங்கனார்க்கு தூழாய் மாலை முடிசூட்டிக் கொடுத்த பூமிப் பிராட்டியின் மறுஅவதாரமான கோதாபிராட்டி, ஜகத்தால் கொண்டாடப்படும் திருவாடிப்பூரத்தில் அவதரித்தது இந்த மாதத்தின் சிறப்பு. ஸ்ரீ வேதாந்த தேசிகனும், 'அம்மா! உனது உருவாகிய பூமியின் காதில் இருந்து புற்றுவாயிலிருந்து (வல்மீகத்திலிருந்து) வால்மீகி தோன்றினார். அவரை உலகம் இன்று 'ஆதிகவி' என்று கொண்டாடுகிறது. உன் காதிலிருந்து பிறந்தவருக்கே இவ்வளவு புகழ் என்றால், உன் திருமுகத் தாமரையிலிருந்து தேனருவிபோல தோன்றிய ப்ரபந்தப் பாசுரங்கள் பெருமிதமாகப் போற்றப்படுவதில் என்ன அதிசயம்?' என்று புகழ்கிறார்.

இவ்வுலகில் அறிய மிகவும் அரிதான வேதாந்தத்தின் அர்த்தத்தை அனைவருக்கும் சுவைப்பதற்கேற்ப விளக்கிய யோகிச்ரேஷ்டரும் சதுச்லோகி மற்றும் ஸ்தோத்ர ரத்னம் எனும் நூல்களை அருளியவருமான 'யமுனைத்துறைவர்' என்று போற்றப்படும் ஸ்ரீ ஆளவந்தார் ஆடி உத்திராடத்தில் அவதரித்தது இந்த மாதத்தின் மேலும் ஒரு சிறப்பாகும்.

திருமயிலையம்பதி எம்பெருமானின் கோடை உத்ஸவம், ஆழ்வார், ஆசார்யர்களின் அவதார உத்ஸவங்களின் படங்கள், 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்ற காப்பகக்கட்டுரை, 'பூமிப்பிராட்டியின் கீதோபதேசம்' மற்றும் ந்ருஸிம்ஹ வைபவத்தைப் போற்றும் வ்யாஸங்கள் இவற்றுடன் வழக்கமாக வெளிவரும் ஆங்கிலத் தொடர்களையும் தாங்கி, ஆடி மாத தேசிக சந்தேசம் உங்கள் கரங்களில்!

ஸ்ரீ:

Aadi Pooram, Jyeshtabhishekam And More

FROM THE DESK OF TRUSTEES

With the divine grace of Sri Vedantha Desikan and the blessings of our presiding deity Sri Alarmelmanga Sametha Sri Srinivasa Perumal, we are happy to connect with you through Desika Sandesam.

The **Aani** month witnessed several spiritually enriching and grand events at our temple. The **seven-day Kodai Utsavam** was celebrated with deep devotion and participation from devotees, bringing forth the joy of divine darshan and the bliss of Utsava Murthi Sevai.

A major highlight of the month was the **Sudarsana Jayanthi Mahotsavam** and the **Maha Sudarsana Homam,** performed with profound devotion and adherence to tradition. We are deeply grateful to the esteemed Archakas and Ritwiks who travelled from the sacred Divya Desams like Srirangam, Kanchipuram, and Tiruvallur to grace the occasion and conduct the Homam with utmost sanctity. This Homam, now a cherished tradition for the past **10 years,** is performed for the well-being of all devotees and the welfare of the world at large.

As we now enter the sacred month of **Aadi,** we mark the beginning of the **Dakshinayana Punya Kalam,** an auspicious period that holds great significance in our spiritual calendar. It is a time for introspection, prayer, and renewed devotion, and we encourage all devotees to participate in the various events and rituals conducted at the temple during this period.

Aadi Pooram is one of the most auspicious festivals observed in the Tamil month of Aadi, marking the birth star of Sri Andal, the only female Azhwar. Aadi Pooram is particularly significant as **Sri Andal** is believed to have merged with Lord Ranganatha on this day. Devotees pray for a harmonious life, prosperity, and the grace of Sri Andal to attain bhakti and divine blessings.

The **Annual Jyeshtabhishekam** is a highly revered ritual performed during **Aadi,** on the day of the **Hastha Nakshatram** in our temple, in accordance with Pancharathra Agama traditions.

The word 'Jyeshtabhishekam' denotes a grand ceremonial anointment, wherein the divine vigraham is ritually bathed with various sacred substances, and accompanied by the chanting of Vedic hymns. This is a form of divine rejuvenation, symbolizing purification, renewal, and the infusion of spiritual energy into the Archa Moorthy.

We take this opportunity to gratefully acknowledge **Sri N.R. Govindarajan** for his noble offering of a **Golden Makarakanti** to Sri Srinivasa Perumal. Such generous offerings by devotees strengthen our shared bond with the temple and deepen the collective devotion.

Looking ahead, we are preparing for the **Maha Samprokshanam** as it has been **12 years** since the last one was performed, and as per temple tradition, we will be undertaking essential Vimana painting, structural maintenance, and other repair works to preserve the sanctity and structure of our temple.

We extend our heartfelt thanks to all devotees for your continued support, contributions, and enthusiastic participation in every Utsavam and religious activity. We seek your continued involvement and blessings as we prepare for the sacred milestones ahead.

May Sri Srinivasa Perumal, Alarmelmangai Thayar and Sri Vedantha Desikan shower their choicest blessings upon everyone.

விச்வாவஸு வருட ஆடி மாத பஞ்சாங்கம்

ஆங்கில தேதி	தமிழ் தேதி	திதி	வாரம்	நக்ஷத்ரம்	உத்ஸவம்	உபயம்
ஜூலை / ஆகஸ்ட்	ஆடி					
17.07.2025	1	ஸப்தமி	வியாழன்	ரேவதி	திருமால்வடை	
18.07.2025	2	அஷ்டமி	வெள்ளி	அச்விநி	பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் சின்ன கருட வாஹனம் உள்புறப்பாடு. ஆஸ்தானம்	ஸ்ரீ ராகவன் C/o. ஸ்ரீ K. ரவி
19.07.2025	3	நவமி	சனி	பரணி	திருவாடிப்பூர உத்ஸவம் 1-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ L.V. நரஸிம்ஹன் குடும்பத்தினர்
20.07.2025	4	தசமி	ஞாயிறு	கார்த்திகை	திருவாடிப்பூர உத்ஸவம் 2-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜகோபாலன்
21.07.2025	5	ஏகாதசி	திங்கள்	ரோஹிணி	திருவாடிப்பூர உத்ஸவம் 3-ம் நாள். காலை பெருமாள், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதி புறப்பாடு. ஆண்டாள் ஆஸ்தானம்	ஏகாதசி: கரசங்கால் ஸ்ரீ மோஹன்குமார். ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ N. சேஷாத்ரி
22.07.2025	6	த்வாதசி / த்ரயோதசி	செவ்வாய்	ம்ருகசீர்ஷம்	திருவாடிப்பூர உத்ஸவம் 4-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாஸன்
23.07.2025	7	சதுர்தசி	புதன்	திருவாதிரை	திருவாடிப்பூர உத்ஸவம் 5-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ C.R. ராகவன்
24.07.2025	8	அமாவாசை	வியாழன்	புனர்வஸு	திருவாடிப்பூர உத்ஸவம் 6-ம் நாள். காலை பெருமாள், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள் வீதிபுறப்பாடு. ஆண்டாள் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	அமாவசை: ஸ்ரீ கோவிந்தன். ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ V.C. ஸ்ரீபதி
25.07.2025	9	ப்ரதமை	வெள்ளி	புஷ்யம்	பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் யானை வாஹனம் உள்புறப்பாடு. ஆஸ்தானம். திருவாடிப்பூரம் உத்ஸவம் 7-ம் நாள். காலை ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	தாயார் - ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர்
26.07.2025	10	த்விதீயை	சனி	ஆயில்யம்	திருவாடிப்பூர உத்ஸவம் 8-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	ஸ்ரீ வேங்கட நரஸிம்ஹன் குடும்பத்தினர்

27.07.2025	11	த்ருதீயை	ஞாயிறு	மகம்	திருவாடிப்பூர உத்ஸவம் 9-ம் நாள். காலை ஆண்டாள் திருமஞ்ஜனம். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை	திட்டை ஸ்ரீ ராஜகோபால் முரளி
28.07.2025	12	சதுர்த்தி	திங்கள்	பூரம்	திருவாடிப்பூர உத்ஸவம். காலை பெருமாள், ஆண்டாள் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஆண்டாள் உள்புறப்பாடு. இரவு திருக் கல்யாண உத்ஸவம், சேர்த்தி ஸேவை	ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி
29.07.2025	13	பஞ்சமி	செவ்வாய்	உத்திரம்	ஊர்கோல உத்ஸவம். மாலை பொழுதுடன் ஆராதனம். பெருமாள், ஆண்டாள் வீதிபுறப்பாடு. கருட பஞ்சமி. காலை கருடன் திருமஞ்ஜனம்	ஆண்டாள் உத்ஸவம்: ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன். கருட பஞ்சமி: ஸ்ரீ R. முகுந்தன்
30.07.2025	14	ஷஷ்டி	புதன்	ஹஸ்தம்	ஜ்யேஷ்டாபிஷேகம். பெருமாள், தாயார், மூலவர், உத்ஸவர் 81 கலச திருமஞ் ஜனம்	ஸ்ரீ R. கோபால ஸ்வாமி ஐயங்கார் பண்ட். C/o. ஸ்ரீ ஆனந்த் ரங்காச்சாரி
31.07.2025	15	ஸப்தமி	வியாழன்	சித்திரை	மதுரகவிகள்	
01.08.2025	16	அஷ்டமி	வெள்ளி	ஸ்வாதி	மாலை தாயார் ஆஸ்தானம்	ஸ்ரீ S. ஸுந்தரம் குடும்பத்தினர்
02.08.2025	17	அஷ்டமி / நவமி	சனி	விசாகம்	திருமால்வடை	
03.08.2025	18	நவமி / தசமி	ஞாயிறு	விசாகம் / அனுஷம்	நம்மாழ்வார்	
04.08.2025	19	தசமி / ஏகாதசி	திங்கள்	அனுஷம் / கேட்டை	நாதமுனிகள்	
05.08.2025	20	ஏகாதசி	செவ்வாய்	கேட்டை	தொண்டரடிப்பொடி	
06.08.2025	21	த்வாதசி	புதன்	மூலம்	திருமால்வடை	
07.08.2025	22	த்ரயோதசி	வியாழன்	பூராடம்	ஸேனைநாதன்	
08.08.2025	23	சதுர்தசி	வெள்ளி	உத்திராடம்	ஆளவந்தார் திருநக்ஷத்ரம், மாலை பெருமாள், தாயார், ஆளவந்தார் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை.	ஆளவந்தார் திருநக்ஷத்ரம்: ஸ்ரீ பத்ரிநாராயணன். வெள்ளிக்கிழமை: ஸ்ரீ T.R. ஸ்ரீநிவாஸன் குடும்பத்தினர்
09.08.2025	24	பௌர்ணமி	சனி	ச்ரவணம்	காலை தேசிகன் திருமஞ்ஜனம். கஜேந்த்ர மோக்ஷம். மாலை பொழுதுடன் திருவாராதனம். ஸேவாகாலம், சாற்றுமுறை. பெருமாள் தங்க கருடன், தேசிகன் வீதிபுறப்பாடு	கஜேந்த்ர மோக்ஷம்: ஸ்ரீ M.K.R. குடும்பத்தினர். ச்ரவணம்: ஸ்ரீ N. சேஷாத்ரி குடும்பத்தினர்
10.08.2025	25	ப்ரதமை	ஞாயிறு	அவிட்டம்	பூதத்தாழ்வார்	
11.08.2025	26	த்விதீயை	திங்கள்	சதயம்	பேயாழ்வார்	
12.08.2025	27	த்ருதீயை	செவ்வாய்	பூரட்டாதி	திருமால்வடை	

13.08.2025	28	சதுர்த்தி	புதன்	உத்திரட்டாதி	திருமால்வடை	
14.08.2025	29	பஞ்சமி / ஷஷ்டி	வியாழன்	ரேவதி	திருமால்வடை	
15.08.2025	30	ஸப்தமி	வெள்ளி	அச்வினி	தாயார் தங்கக்கேடயம் உள்புறப்பாடு	ஸ்ரீ V. ராஜகோபால் குடும்பத்தினர்
16.08.2025	31	அஷ்டமி	சனி	பரணி	திருமால்வடை	

வைணவ வழக்குச் சொற்கள் ⑪

த்ருஷ்டாந்தம்: நடைமுறை உதாரணம்; concrete example

தலம்: ஊர்; ஸ்தலம்

தலைக்கீடு: வ்யாஜம்; pretext

தலைக்கட்டுதல்: முடித்தல்; to conclude; நிறைவேற்றுதல்

தசை: நிலை; state

தண்ணளி: அருள்

ததியோதனம்: புதிதாக வடித்த சாதத்தில் கடுகு தாளித்துக் கொட்டி இஞ்சி, மாங்காய் போன்றவையும் கலந்த தயிர் அமுது

தனிமுதல்: மூலப்ரக்ருதி; primordial

தமிழ்த்தலைவன்: பேயாழ்வார்

தமிழரிசைகாரர்: பொய்கை, பூதம், பேய் மற்றும் திருமழிசை ஆழ்வார்கள்

ததி: தயிர்

தமர்: அடியார்; நெருங்கிய உறவினர்

தடா: தவலை

தட்டொளி: கண்ணாடி

தடுக்கு: குடிசை

தந்ததாவனம்: பல் துலக்குதல்

தனியன்: ஒரு நூலின் தொடக்கத்தில் நூலையும் அதன் ஆசிரியரையும் சிலாகித்து எழுதிச் சேர்ந்துள்ள வாழ்த்துப்பா (நூற்பாயிரம்); பாயிரமாய் நிற்கும் பாடல்

தனிமாலை: தீக்ஷை

தலையல்லால் கைம்மாறு இல்லேன்: விழுந்து வணங்குவதல்லாமல் என்னால் வேறு வழியில் நன்றியைக்காட்ட இயலாது

தரவு: தகவல் மூலம்; source

தளிகை: சமைத்த உணவு; சமைத்தல்; நைவேத்யத்திற்காகத் தயாராகும் உணவுப்பொருள்; palate

ததீயாராதனம்: அடியார்களுக்குச் செய்கின்ற கைங்கர்யம்; (தத் = பகவான்; ததீ = பாகவதர், அடியார்); பாகவதர்களுக்கு அமுதுபடி செய்தல்

தத்வத்ரயம் : (1) சித், அசித், ஈச்வரன் என்ற 3 அடிப்படையான உண்மைகள்

தண்டு: கதாயுதம்; ஸன்யாஸிக் கோல்

தண்கால்: குளிர்ந்த காற்று; ஒரு திவ்யதேசம்

தகளி: அகல் (விளக்கு)

தகவுரை: புருஷகாரம்; recommendation

தனி நாயகம்: ஒப்பற்ற தலைமை

தமம்: மனத்தைப் புறத்தே செல்லாமல் அடக்குவது

தமர் உக்ந்த திருமேனி: திருநாராயணபுரம் (மேல்கோட்டை) ராமானுஜர் விக்ரஹம்

தாமம்: (பரந்தாமன்) மாலை; கயிறு

தார்: தலைமை

தாழி: ஓடம்

தாயார்: பெருமாளுடைய தேவி; Consort

தாயாதி: தந்தை வழி வரும் நெருங்கிய உறவினர்

தாமோதரன்: கயிற்றால் கட்டுண்ட வயிறு உடையவன்

தான் உகந்த திருமேனி: ஸ்ரீபெரும்பூதூர் ராமானுஜர் விக்ரஹம்

தானான திருமேனி: திருவரங்கத்தில், இராமானுஜர் பரமபதித்த பிறகு ப்ரதிஷ்டை செய்த அவரது திருவுருவம்

தான்தோன்றி: ஸ்வயம்பு

திருவுள்ளம்: எண்ணம், நினைப்பு, தகவல்; thought, idea

திருவோலக்கம்: தர்பார்

திருநுதல்: நெற்றி

திரவியம்: வழிபாட்டுக்குரிய பொருள்கள்

திருக்காப்பு: (1) ஸந்நிதிக் கதவு; (2) locking; (3) பல்லாண்டு; (4) உபசார அர்த்தமான Coating (வெண்ணெய்க் காப்பு, சந்தனக்காப்பு); (5) ஸன்னிதியைப் பூட்டுதல்

'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து

(தொடரும்...)

ஸ்ரீ:

சூடிக்கொடுத்த நாச்சியார்

பையம்பாடி சேட்டலூர் ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி, நங்கைநல்லூர், வைகுண்டவாஸீ

பெரியாழ்வார் திருமகளாய் வந்துதித்து அரங்கற்குத் துழாய் மாலை முடிசூடிக் கொடுத்த நாச்சியாரைப்பற்றி பலர், பலமுறை, பலவிதமாய் பாடியுள்ளனர். இருப்பினும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் தமது க்ரந்தங்களில் பலவிடங்களில் நாச்சியார் திருமொழியையும், திருப்பாவையையும் ஆங்காங்கே எடுத்து சிலவிடங்களுக்கு விளக்கம் அருளியபடியை இங்கு சிறிது காண்போம்.

'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்பதாக ஆண்டாளுக்குத் திருநாமம். தாம் முதலில் சூட்டிக் கொண்ட துழாய் மாலையை எம்பிரானுக்குப் பிறகு அளித்து மகிழ்ந்த படியால் இப்படி என்பர். மிகவும் பக்தியுடனிருப் பவர்களுக்கு சாஸ்த்ரவரம்பை மீறிய இச்செயல் தகுமா? என்று கேள்வி வருகிறது. ஒருமுறை பயன்பட்ட பூ முதலானவற்றை நாமே பிறகு சூட்டிக் கொள்வதில்லை. இப்படியிருக்க இது எங்ஙனம் பொருந்தும்? என வினா எழ, இதற்கு ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் சரமச்லோகாதிகாரத்தில் எடுத்த ஒரு வசனம் பதில் கூறுவதுபோல் அமைந்ததைக் காண்க.

அதாவது **தத்ஸர்வம் தேவதேவஸ்ய சரணா உபதிஷ்டதே** என்பதாய் ஒரு வசனத்தை எடுத்தார். பொதுப்படையாய் எம்பெருமானின் பெருமைகளை அறியாமல் 'இவனும் ஒரு தேவதை, இவனாலும் நமக்கு ஏதேனும் நன்மைகள் ஏற்படக்கூடும்' என்றபடி எண்ணி எவன் ஆராதிக்கிறானோ அவன் செய்யும் பூசனையை எம்பெருமான் காலால் ஏற்றுக் கொள்கிறானாம். **யா: க்ரியா: ஸம்ப்ரயுக்தா: ஸ்யு: ஏகாந்த கதபுத்திபி: தா: ஸர்வா: சிரஸா தேவ: ப்ருதிக்ருஹ்ணாதி வை ஸ்வயம்** என்பது மற்றொரு வகை. எம்பெருமானே பரமாத்மா. இவனை ஆராதிக்க நமக்கோர் விதி வாய்க்கின்றதே – என்ற கருத்தில் யாவனொருவன் ஆராதனம் செய்கிறானோ, அந்த பஜனையை எம்பெருமான் தமது தலையால் ஏற்றுக் கொள்கிறான் என்பது இதன் கருத்தாகும். இந்த கருத்தை ஸ்ரீஆண்டாள் சூடிக்கொடுத்ததையும் தம் சிரஸால் ஏற்றுக் கொண்டு மெய்ப்பித்ததையும் இந்நிகழ்ச்சி வலியுறுத்தும். உபநிஷத்தை இரவில் பாராயணம் செய்வது கிடையாது. பின்மாலை வேளையிலும், பகற்போதிலுமே அதைச் சொல்வது ஆன்றோர்கள் வழக்கமாகும். மேலும் வேதங்களின் கடைசி பாகம் உபநிஷத் எனப்படும். கர்ம காண்டங்களில் ஏதேதோ கர்மாக்களைப் பற்றி எல்லாம் தெரிவித்த வேதம், உபநிஷத்துக்களிலேயே ஆத்ம விசாரம் செய்ய முற்பட்டது. எம்பெருமானுக்கு அருகில் நம்மை நிறுத்த முற்படுகிறபடியால் உபநிஷத் என்பதாய்

இதற்கு பொருள்படும். இத்தகைய சிறப்பு மற்றைய நூல்களுக்கு இல்லை. இவ்வளவையும் கொண்டு சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிய திருப்பாவையை உபநிஷத் என ஸ்ரீஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த பாங்கைக் காண்மீர்.

தூலங்கள் என்ன துரிதங்கள் மாய்ந்தன என்றது, '**போய பிழையும் புகுதருவாநின்றனவும் தீயினில் தூசாகும்** என்று உபநிஷத்துச் சொன்னபடியே உத்தர-பூர்வ அகங்கள் கழிந்தபடியை கணிசிக்கிறது' என்று ஸ்ரீ ரஹஸ்ய ஸந்தேச விவரணத்திலுள்ள இந்த ஸ்ரீஸூக்தியால் ஸ்ரீஆண்டாளின் பெருமையையும், அவர் திருவாக்கின் சீர்மையும், அதைப் போற்றி உகப்பதும் புந்தியில் கொள்வதும் சாலவும் சிறப்பானது என்பதும், உபநிஷத்துக்களில் போல் இதில் உள்ள ஒவ்வொரு குறிப்புக்களும் எம்பிரானை நம் எதிரில் கொணர்ந்து நிறுத்தும் நிலையிலுள்ளமையும் மற்றும் பலவும் தெரிவிக்கப்பட்டன. வேறு அடைமொழி ஒன்றுமில்லாமல் உபநிஷத்து என்பதாய் திருப்பாவையைக் குறிப்பிட்ட பாங்கே தனிச்சிறப்பை விளக்கப்போதுமானது.

பரமைகாந்தி ஸார்வபௌமரான ஸ்ரீபெரியாழ்வார் திருக்குமாரத்தியான ஆண்டாள் எம்பெருமானை அடைவதற்காக ஒரு க்ஷுத்ர தேவதையான காமதேவனை ஆராதித்தது எப்படிப் பொருந்தும்? என்று வினா எழுந்தது. இங்கு நாச்சியார் திருமொழியில்

‘தையொரு திங்கள்’ என்ற பதிகத்தில் மன்மதனை ஆண்டாள் ஆராதித்ததைக் கொண்டு இக்கேள்வி எழுகிறது. இதற்கும் பதில் கூறும் முகமாய் ஆசார்யர் பகவத் சாஸ்த்ர விரோத பங்காதிகாரத்தில் அருளிச்செய்ததைக் காண்மின். **நாராயணனே நமக்கே பறை தருவான்** என்றும், **எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்றோடு உற்றோமேயாவோம் உனக்கே நாமாட் செய்வோம்** என்றும் நாச்சியார் க்ருஷ்ணனைப் பெறுவதற்காகப் பண்ணின காமதேவ அர்ச்சனம், ச்ருங்கார ஸமாத்த்யநுகுண க்ருஷ்ண ரூபாந்தர விஷயம் என்று. ‘அநங்க தேவா’ (நாச்சியார் (1-1), ‘காமதேவா’ (1-2), ‘மன்மதனே’ (1-5) என்றெல்லாம் மன்மதனைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டதுடன், **கருப்புவில் மலர்க்கணைக்காம வேளைக் கழலிணைப் பணிந்து** என்று தாம் வணங்கியபடியையும் ஆண்டாள் குறிப்பிடுகிறார். மன்மதனுக்கு ஏற்ற முருக்க மலரைக் கொண்டு அவனை ஆராதித்ததும் (1-3) ஏற்படுகிறது. பங்குனி மாதத்தில் தான் காமதேவனுக்கு விழா எடுப்பர். காம தஹனமும் அந்த மாதத்திலேயே. இதை **பங்குனிநாள் திருந்தவே நோற்கிறேன் காமதேவா (1-6)** என்றதால் அறியலாம். இப்படிகளால் பலவிதத்திலும் இந்த பதிகத்தில் கூறியது மன்மதனின் பூசனையே அன்றோ? இதை எப்படி எம்பெருமானையே பதியாகப் பெற எண்ணிய பரமைகாந்தியின் திருமகளாரான ஆண்டாள் அநுஷ்ட்டித்தார்? என்று கேள்வி.

இதற்கு பதில் வருமாறு: மறந்தும் புறம் தொழா மாந்தர் ஆன நம் பூர்வாசார்யர்கள் ஒருக்காலும் தேவதாந்தரார்ச்சனை செய்ய முற்பட மாட்டார்கள். ஆகவே இங்கெல்லாம் வரும் காமதேவன்-அநங்கன்-மன்மதன் முதலான சொற்கள் **காமதேவ: காமபால: காமீகாந்த: க்ருதாகம:** என்ற ஸஹஸ்ரநாமத்தின் படி எம்பிரானின் பேராயிரங்களில் ஒரு சில சொற்களானபடியால் அவனைப்பெற அவனையே அர்ச்சித்ததை விளக்க வந்தன. **ஸ்வப்ராப்தே: ஸ்வயம் ஏவ ஸாதநதயா ஜோகுஷ்ய மாண: ச்ருதௌ** என்றது இங்கும் தகும். மேலும் வாஸுதேவ - ஸங்கர்ஷண - ப்ரத்யும்ன - அநிருத்தர்கள் - என்ற நான்கு வ்யூஹங்களில் ப்ரத்யும்னன் ஒரு வ்யூஹத்திற்குத் தலைவராவர். இந்நால்வரும் எம்பெருமானின் ப்ராதுர்ப்பாவ விசேஷங்கள் என்பதை ஆகமங்களின் வாயிலாக அறியலாம்.

ஆகவே ச்ருங்கார ரஸத்திற்குத் தக்கபடி - உலகில் மன்மதனை எந்தவகை ஆயுதம், பூ, வில், வாஹனம், பரிஜனம், பரிச்சதங்கள் இவைகளுடன் வணங்குகிறார்களோ - இவற்றிற்கு எல்லாம் அடியாக, மூலமாக எம்பிரானுக்கே ஒரு ரூபமுண்டு. அதையே ஆண்டாள் ஆராதித்தது. காமதேவ: கண்ணன், காமபால: பலராமன். ஆகவே இதில் தேவதாந்தரார்ச்சனம் இல்லை. ஸ்ரீந்ருஸிம்ஹனை **நிலாத்திங்கள் துண்டத்தான்** என ஆழ்வார் குறிப்பிட்டார். வில்லையும் அம்பையும் கையில் ஏந்தி, நிலவைத் தலையில் தரித்து, மூன்று கண்களுடன் கூடியவர்கள் யாவருமே சிவன் என்று கொள்வது நகைப்பிற்கிடமாகும். ந்ருஸிம்ஹனுக்கே இவைகள் அமைந்தன. ந்ருஸிம்ஹனை உபாஸித்தபடியால் சிவனுக்கும் இதே நிலை ஏற்பட்டது. சக்கரத்தாழ்வானுக்கும் மூன்று கண்களுண்டு. இவைகள் யாவும் இதிஹாஸ, புராண, ஆகமங்களில் அறியப்படும்.

ஆகவே உலகில் நாட்டாரால் வணங்கப்படும் மன்மதனுக்கு இந்த காமதேவனான ப்ரத்யும்னனின் ஆயுத-புஷ்ப-பரிஜன-பரிச்சதங்களே அமைந்தது பற்றி இதைச் சரிவர பிரித்து அறியாமல் இங்கு மன்மதனை ஆண்டாள் வணங்கியதாய் கொள்வது தகாது.

‘கண்ணனின் உருவங்கள் அளவிடமுடியாதனவை’ **(க்ருஷ்ணரூபாணி அஸங்க்ய்யாநி** என்ற வசனமிங்கு கொள்வது. இதனால் **உன்னையும் உம்பியையும். தொழுதேன்** (1-1) என்ற நாச்சியார் திருமொழிக்கு உரையிடும்போது ‘காமனும் அவன் தம்பி சோமனும்’ என்று சிலர் கூறியது ஆராய்ந்தால் பொருந்தாது என்று கொள்ளவும்.

‘நாராயணனே’ என்ற போதும். ‘நமக்கே’ என்ற போதும் உள்ள தீர்வுகளால் இங்ஙனம் பொருள் கொள்ளவேண்டும். எம்பெருமானைப் பெறுவதற்காகக் கூட குறுக்குவழியில் சென்று தேவதாந்தரங்களை உபாஸிக்க மாட்டாதவர்கள் இவர்கள். இதையும் ஸ்ரீதேசிகனே **தேவதாந்தரத்தைக் குறித்து தண்டுல ப்ரதாநம் பண்ணினாலும் சக்யமாயிருக்க பகவத்விஷயத்தில் தண்டுல ப்ரதாநாதிகளையும் கூடத்தவரினும்** (விரோத பரிஹாரம் 38-வது வாக்யம்) என்று அருளிச்செய்து குறிப்பால் உணர்த்தியருளினார். இங்கு **கட்டுவிச்சி கட்டேறி சீரார் உலகில் சிலநெல் பிடித்தெறியா** என்ற சிறிய திருமடல் அடிகள் உற்றுநோக்கத் தக்கவையாகும்.

1. **உனக்கே நாமாட்செய்வோம்** (திருப்பாவை - 29) என்றது சரணாகதர்களுக்கு தமது நிலைக்கு ஏற்ற உத்தரக்ருத்யமிருக்கும் படி என்பதாய் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் உத்தரக்ருத்யாதிகாரத்தில் வெளியிட்டருளினார்.

2. கார்பண்யம் என்ற சரணாகதியின் அங்கத்தை நாச்சியார் **கறவைகள் பின்சென்ற’** (திரு. 28) என்ற பாசுரத்தில் வெளியிட்டருளினதாய் இதே உத்தரக்ருத்யாதிகாரத்தில் வெளியிட்டார்.

3. ‘உகந்து பணிகொள்ள உரியனான எம்பெருமான் திருவுள்ளம் அழலாமைக்காக கரணத்ரயத்தாலும் செய்யாதன செய்யோம்’ (திரு - 2) போன்றவற்றில்

ப்ரதானம் ப்ரம்ஹவிதபசாரம்' என்று இதே அதிகாரத்தில் ஸ்ரீஸ்வாமி அருளினார். இதனால் இந்த பாசுரத்தில் மனோவாக்காயங் களால் செய்யக்கூடாத அபசாரங்களில் ப்ரம்ஹவித்துக்களிடம் அபசாரம் மிகக்கொடுமையானது என்பது குறிப்பிடத்தக்கது.

4. **போய பிழையும் புகுதருவானின்றனவும் தீயினிற்றூ சாகும்** (திருபாவை - 5) என்றவிடத்தில் எந்த எந்த பாபங்களை ஆண்டாள் திருவுள்ளப் பட்டார்? என்பதை 'பொன்னும் இரும்புமான விலங்குகள் போலே பந்தகங்களான பூர்வ உத்தர புண்ய பாபங்களையும், ப்ராரப்த கார்யமான கர்மத்தில் இவன் இசைந்த அம்சம் ஒழிய மேலுள்ள கூற்றையும் போய **பிழையும் புகுதருவானின்றனவும் தீயினில் தூசாகும்** என்கிறபடியே முன்பே இவனோடு துவக்கறுத்து வைக்கையாலே' (நிர்யாணாதிகாரம்) என்ற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார ஸ்ரீஸூக்தியால் அறியலாம்.

5. சரணாகதி ஆகிவிட்டால் ப்ரபந்நன் ஸந்த்யாவந்தனம் முதலான நித்ய கர்மங்களைச் செய்யாவிடினும் குற்றமில்லை என்பதாய் ஒரு சிலர்கூறவும் எழுதவும் தலைப்பட்டனர். இதை ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் முதலான பூர்வாசார்யர்கள் ஒப்பவில்லை. இதை விளக்கும் போது, 'இந்த நிஷ்கர்ஷம் ஸத்வ நிஷ்ட்டராய் விவேகிகளாய் இருப்பார் தெளிந்து அங்கீகரிப்பர்கள். இந்த அர்த்தத்தை 'செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்' என்றும் 'செய்யேன் தீவினை என்று அருள் செய்யும்' என்றும் அருளிச் செய்கிறார்கள் என்று ப்ரபாவ வ்யவஸ்தாதிகாரத்தில் ஆசார்யர் விளக்கியருளினார். இப்படியே நிர்வேத பர்வத்திலும். 'ஸாத்விக ஸம்பாஷணாதிகளாலே முகிழ்ந்த நிர்வேதம் நமச்சப்த நிஷேத்த்ய நிரூபணத்தாலே முற்றி 'செய்யாதன செய்யோம், நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடு' என்னும் படி **செய்யேல் தீவினை என்று அருள் செய்யும் கையார் சக்கரக் கண்ணபிரான்** அநுமதி பண்ணாத வழிகளில் ஆபத் தசையிலும் அடியிட நடுங்கும்படியாம்' என்ற பரமபத ஸோபாந ஸ்ரீஸூக்தியை இங்கு அநுஸந்திப்பது.

6. எம்பெருமானிடம் உள்ள ஸௌலப்யம் எளிய முறையில் நம்மால் அண்ட முடியும் நிலையை விளக்கும்போது 'ஸௌலப்யம், **சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்** என்றும் அகலாதபடி **ஏரார்ந்தகண்ணி யசோதை இளஞ்சிங்கம்' நாராயணனே நமக்கே பறை தருவான்** என்று ஆபாலகோபாலம் அணியனாய் அபேக்ஷிதம் தந்து அருளும் என்கைக்கு உறுப்பாம்' என்று ஸ்ரீஸாரஸாரத்தில் த்வயாதிகாரத்தில் திருப்பாவைப் பாசுரத்தை எடுத்து விளக்கியதைக் கொண்டு ஆசார்யர் திருவுள்ளத்தை அறியலாம்.

7. இதே க்ரந்தத்தில் 'மோக்ஷயிஷ்யாமி' என்றவிடங்களில் எந்த வகை பாபங்களினின்றும் எம்பெருமான் நம்மை விடுவிக்கிறார்? என்பதை விளக்க முற்பட்டபோது 'இப்படி 'போய பிழையும்' இத்யாதிகளில் சொன்ன விரோதிகளைக் காட்டி, இவற்றைத்தான் கழிக்கும் படியை அருளிச்செய்கிறான்' என்று அவதாரிகை இட்டதையும் இங்கு கொள்வது.

8. **குறை ஒன்றுமில்லாத கோவிந்தா** (திருப்பாவை - 28) என்றதற்கு ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸாரஸங்க்ரஹத்தில் பண்ணின வ்யாக்யானத்தைக் காண்மின்.

'பரந்யாஸம் பண்ணின முமுக்ஷுவுக்கு மோக்ஷார்த்தமாக கர்த்தவ்ய சேஷம் இல்லாமையாலே குறையில்லை. இவனுக்கு போக பூர்த்தி வாராமையாலே குறை உண்டு. பரஸ்வீகாரம் பண்ணின சரண்யனுக்கு ஸர்வகாலத்திலும் போக ஸங்கோசம் இல்லாமையாலே குறை இல்லை. இவனுக்கு ஆச்ரித ரக்ஷணத்தில் தன்மை பெறுத்துமளவும் க்ருத்யசேஷம் உண்டு. ஆகையாலே குறை உண்டு. இஜ்ஜீவனுக்கு பூர்வ அவஸ்த்தையிலே அஜ்ஞானம் அதிகாரமாய், அபவர்க விருத்தம் உபாயமாய், அதற்குத் துணையான வ்யாபாரங்கள் வ்ருத்தியாய், ப்ரக்ருதி குணாநுபவம் போகமாய்ப் போந்தது, இப்போது ஸதாசார்ய கடாக்ஷத் தாலே தத்வஜ்ஞானம் அதிகாரமாய், ஸம்ஸார விருத்தம் உபாயமாய், ஆஜ்ஞா-அநுஜ்ஞைகளால் உண்டான பகவத் கைங்கர்யம் வ்ருத்தியாய், பகவத் குணாநுபவம் போகமாய்ப் போருகிறதாகையாலே நமக்கு என்ன குறை உண்டு' என்னவுமாம்.

'அடைய அருளாய்' என்னவேண்டும் அவஸ்த்தை, ஆகையாலே குறை உண்டு என்னவுமாம். கீழ் உத்தமமான இரண்டு ஆகாரங்களாலுமிறே முக்தனாம் அளவும் இவனுக்கு ப்ரீதி விஷாதங்கள் நடக்கிறது. ஆகையாலே சரண்யனுடைய கர்த்தவ்ய சேஷத்தில் குறையும் தீருகையாலே இப்படி, குறை ஒன்றும் இல்லாத கோவிந்தனாலே அநாதியான குறை தீர்ந்தவனுக்கு மேல் அநந்தமான நிறைவேயாய் இருக்கும். இது பூர்ணப்ரகாரம் என்று.

இவ்வளவு பெரிய சொற்றொடர்களைக் கொண்டு இங்கு குறை ஒன்றுமில்லாமையை விளக்கிய பாங்கு வியப்பையளிக்கிறது. ஸ்ரீராமாவதாரத்தில் அநுமன் தூது சென்றதைப்போல் தாம் தூது செல்லமுடியாமல் போய்விட்டதே என்று எம்பெருமானுக்கு நேர்ந்த குறை **இன்னார் தூதன் என நின்றான் எவ்வுள் கிடந்தானே** என்றபடி பாண்டவ தூதனான நிலையில் நீங்கியதாய் வைத்து உரைப்பதைவிட ஸர்வ சாஸ்த்ரார்த்தங்களையும் உள்ளடக்கிய இந்த ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த உரையின் நேர்மை, சீர்மை ஸ்ரீபாஷ்யாதிகளில் சிரபரிசயம் பண்ணிய மஹாப்ராஜ்ஞர்களுக்கே விளங்கும்.

Sponsorships and donations towards publication expenses are welcome

ஶ்ரீ:

With Pranams:

Sri Sridhar Parthasarathy & Family,
Luz Church Road,
Mylapore, Chennai - 600 004.

SVDD thanks Sri Sridhar Parthasarathy & Family
for sponsoring this month's issue of Desika Sandesam

கோடை உத்ஸவம்

ஸ்ரீ:

கோடை உத்ஸவம்

கோடை உத்ஸவம்

ஸ்ரீ:



நாதமுனிகள் திருநக்ஷத்ரம்

ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்

ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்





ஸ்ரீ ஸுதர்சன ஹோமம்

ஸ்ரீ:

ச்ரவணம்

ஶ்ரீ:

பூமிப்பிராட்டியின் கீதோபதேசம்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

ச்ரிய: பதியான ஸ்ரீவைகுண்ட நிகேதனன் ஆச்ரிதர்கள் உய்யவேண்டும் என்பதற்காக ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்துப் பண்ணின உபதேசம் பகவத் கீதை. தனது நாயகனின் திருக்கல்யாண குணங்கள் மற்றும் பராக்ரமங்களைப் பாரோர் அறிவதற்காகவும், அவனது உபதேசங்கள் ஜன்மம் கொண்ட அனைவரையும் சென்றடைந்து அவர்களைக் கரை சேர்க்க வேண்டுமென்ற காருண்யத்தினாலும், பூமிப் பிராட்டி கோதை நாச்சியாராக அவதரித்தருளினாள். ஆச்ரிதரக்ஷணத்திற்கெனதன்நாயகன்கீதையில்உபதேசித் தவற்றை எளிய தமிழில் பாமாலையாகக் கோர்த்து திருப்பாவை (30 பாசுரங்கள்) மற்றும் நாச்சியார் திருமொழி (143 பாசுரங்கள்) ஆகியவற்றைக் கர்மபத்தர்களுக்கு அநுக்ரஹித்தாள்.

ஜகத்பிதாவும் ஜகன்மாதாவும் முறையே கீதையின் மூலமும் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி மூலமும் ஆச்ரிதற்கு உணர்த்தும் விஷயங்களில் அந்வயித்து அந்த திவ்ய தம்பதிகளின் கருணையை யாசிப்போம்.

துஷ்ட நிக்ரஹம் சிஷ்ட பரிபாலனம்

பதினெட்டு அதிகாரங்களாக அமைந்துள்ள கீதையின் முதல் அதிகாரத்தில் உள்ள ச்லோகம் இது.

ஸ கோஷோ தார்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத் ।
நபச்ச ப்ருதிவீம் சைவ துமுலோ வ்யநுநாதயந் ॥
[பகவத்கீதை - 1.19]

ஸ்ரீக்ருஷ்ணனின் பாஞ்சஜந்ய ஒலியானது இடியென முழங்கி அவனை எதிர்த்து நின்ற கௌரவர்களது இதயத்தில் பயத்தினை உண்டு பண்ணியது - **துஷ்ட நிக்ரஹம்.** அவனடி பணிந்த பாண்டவர்க்கோ வெற்றி முழக்கமாய் அமைந்தது - **சிஷ்ட பரிபாலனம்.**

கீதையின் நான்காவது அதிகாரத்தில் உள்ள கீழ்க்கண்ட ச்லோகம் மிகவும் ப்ரஸித்தி பெற்றது.

பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் ।
தர்ம ஸம்ஸ்தாபநார்தாய ஸம்பவாமி யுகேயுகே ॥
[பகவத்கீதை 4.8]

சாதுக்களை (ஆச்ரிதர்கள்) ரக்ஷித்து (**சிஷ்ட பரிபாலனம்**) துஷ்டர்களை அழித்து (**துஷ்ட நிக்ரஹம்**) தர்மத்தை நிலைநாட்டுவதற்கு ஒவ்வொரு யுகத்திலும் அவதரிப்பேன்.

பகவத் கீதையிலிருந்து உதாஹரணமாக மேற்கோள் காட்டப்பட்ட இந்த இரண்டு ச்லோகங்களின் பொருளினை அழுந்தக் கூறும் திருப்பாவை பாசுரங்கள் எவையெவையென்று பார்ப்போம்.

மார்கழித் திங்கள் (1)

'கூர்வேல் கொடுந்தொழிலன்' - **துஷ்ட நிக்ரஹம்**

'கார்மேனிச் செங்கண் கதிர் மதியம் போல்முகத்தான் நாராயணனே நமக்கே பறை தருவான்' - **சிஷ்ட பரிபாலனம்**

ஆழிமழைக் கண்ணா (4)

'ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து' - **துஷ்ட நிக்ரஹம்**

'நீ கைகரவேல் ஆழியுள் புக்கு முகந்துகொடார்த்தேறி பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில் தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல் வாழ உலகினில் பெய்திடாய்' - **சிஷ்ட பரிபாலனம்.**

இங்கு, சார்ங்கத்திலிருந்து அம்பு மழை பெய்வது போல அடியார்கள் மேல் கருணை மழை பொழிவாய் எனும் ப்ரார்த்தனை தெளிவு.

புள்ளும் சிலம்பின காண் (6)

‘வெள்ளை விளிசங்கின் பேரரவம் பேய்முலை நஞ்சுண்டு கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி’ – **துஷ்ட நிக்ரஹம்**

‘வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும் மெள்ள எழுந்து அரி என்ற பேரரவம் உள்ளம் புகுந்து குளிர்ந்து’ – **சிஷ்ட பரிபாலனம்**

கீழ்வானம் வெள்ளென்று (8)

‘மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய’ – **துஷ்ட நிக்ரஹம்**

‘போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக் கூவுவான் வந்து நின்றோம் தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால் ஆவாவென்று ஆராய்ந்து அருள்வான்’ – **சிஷ்ட பரிபாலனம்**

கனைத்திளம் கற்றெருமை (12)

‘சினத்தினால் தென் இலங்கைக் கோமானைச் செற்ற’ – **துஷ்ட நிக்ரஹம்**

‘மனத்துக்கினியானைப் பாட கனைத்து இளம் கற்றெருமை கன்றுக்கு இரங்கி நினைத்து முலை வழியே நின்று பால்சோர நனைத்து இல்லம் சேறாக்கும்’ – **சிஷ்ட பரிபாலனம்**

புள்ளின் வாய் கீண்டானை (13)

‘புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனைக் கிள்ளிக் களைந்தானை’ – **துஷ்ட நிக்ரஹம்**

‘குள்ளக் குளிரக் குடைந்து நீராடி கீர்த்திமை பாடிப் போய்க் கள்ளம் தவிர்ந்து கலந்து’ – **சிஷ்ட பரிபாலனம்**

முப்பத்து மூவர் (20)

‘செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும்’ – **துஷ்ட நிக்ரஹம்**

‘எம்மை நீராட்டு’ – **சிஷ்ட பரிபாலனம்**

ஏற்ற கலங்கள் (21)

‘மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண் ஆற்றாது வந்துஉன் அடிபணியுமா போலே’ – **துஷ்ட நிக்ரஹம்**

‘ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்’ – **சிஷ்ட பரிபாலனம்**

மாரிமுலை முழஞ்சில் (23)

‘மாரி முலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்று தீவிழித்து வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி மூரி நிமிர்ந்து முழங்கி’ – **துஷ்ட நிக்ரஹம்**

‘போதருமாப் போலே கோப்புடைய சீரிய சிங்காசனத் திருந்த நீ போந்தருளி யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள்’ – **சிஷ்ட பரிபாலனம்**

அன்றிவ்வுலகமளந்தாய் (24)

'அன்றிவ்வுலகமளந்தாய் சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் பொன்றச்சகடமுடைத் தாய் கன்று குணிலாவெறிந்தாய்' – **துஷ்ட நிக்ரஹம்**

'குன்று குடையாவெடுத்தாய்' – **சிஷ்ட பரிபாலனம்**

ஒருத்தி மகனாய் (25)

'தரிக்கிலனாகித் தான் தீங்கு நினைத்த கருத்தைப் பிழைப்பித்த கஞ்சன் வயிற்றில் நெருப்பென நின்ற' – **துஷ்ட நிக்ரஹம்**

'பறைதருதியாகில் வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேல்' – **சிஷ்ட பரிபாலனம்**

மாலே மணிவண்ணா (26)

'ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே' – **துஷ்ட நிக்ரஹம்**

'சாலப் பெரும் பறையே பல்லாண்டு இசைப்பாரே' – **சிஷ்ட பரிபாலனம்**

கூடாரை வெல்லும் (27)

'கூடாரை வெல்லும்' – **துஷ்ட நிக்ரஹம்**

'பாடிப்பறை கொண்டு யாம் பெறும் சம்மானம் நாடுபுகழும் பரிசினால் நன்றாக சூடகமே தோள் வளையே தோடே செவிப்பூவே பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்... பாற்சோறு மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து குளிர்ந்தேல்' – **சிஷ்ட பரிபாலனம்**

சாமான்யரின் க்ருஹங்களில் தாயானவள் தந்தையின் சினத்திலிருந்து காத்துக் கொள்ளும் வழிவகை களைத் தன் குழந்தைகளுக்கு அவ்வப்பொழுது கற்றுக் கொடுப்பாள். பொறுமையின் எல்லை நிலமாகக் கருதப்படும் பூமிப் பிராட்டி, தனது சிசுக்களாம் ஆச்ரிதற்கு தன் நாயகனை வசப்படுத்தும் ரஹஸ்யத்தினைத் திருப்பாவையில் கற்றுக் கொடுக்கிறாள். அவனது ரக்ஷணம் தேவையெனில் அவனடி பணியுங்கள். மனம் கனிந்து ரக்ஷித்தருள்வான். இல்லையெனில் அவனது நிக்ரஹ ஸங்கல்பத்திற்கு ஆளாக நேரும் என்பதை ஈடுயிணையில்லாத காருண்யத்துடன் தன் குழந்தைகளுக்கு உணர்த்துகிறாள் அன்னை. தன் குழந்தைகளின் மீது எம்பெருமான் நிக்ரஹ ஸங்கல்பம் கொண்டாலுமே **யத் ப்ரூ பங்காத்** எனும்படியாக தனது ஒற்றைப் புருவ நெளிப்பினாலேயே புருஷகாரம் பண்ணி அவனது கோபத்தினைத் தணிப்பதுவும் அவளே.

நித்யம் எது, அநித்யம் எது?

கீதையின் இரண்டாவது அதிகாரத்தில் உள்ள கீழ்க்கண்ட இரண்டு ச்லோகங்களும் பதிமூன்றாவது அதிகாரத்தில் உள்ள மூன்றாவது ச்லோகமும் எது நித்யமானது எது அநித்யமானது என்பதைத் தெளிவுபடுத்தும்.

நைநம் சிந்தந்தி சஸ்த்ராணி நைநம் தஹதி பாவக: ।
ந சைநம் க்லேதயந்த்யாபோ ந சோஷயதி மாருத: ॥ [2.23]

ஆத்மாவை ஆயுதங்கள் வெட்டுவதில்லை. நெருப்பு எரிப்பதில்லை. ஜலம் கரைப்பதில்லை. காற்று உலர்த்துவதில்லை

அச்சேத்யோயமதாஹ்யோயம் அக்லேத்யோசோஷ்ய ஏவ ச ।
நித்ய: ஸர்வகத: ஸ்தாணுரசலோயம் ஸநாதந: ॥ [2.24]

ஆத்மா ஆயுதங்களால் வெட்ட முடியாதவன். நெருப்பினால் எரிக்க முடியாதவன். ஜலத்தினால் கரைக்க முடியாதவன். காற்றினால் உலர்த்த முடியாதவன். அதனால் அழிவு இல்லாதவன். நித்யமாய் நிலைத்திருப்பவன்.

இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே।
ஏதத்யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரக்ஞ இதி தத்வித:॥ [13.1]

ஆத்மா எனும் உயர்ந்த ப்ரகாரம் உறைவதற்கான க்ஷேத்ரமே தேஹம். அசேதனம். தாழ்ந்த ப்ரகாரம். நிரந்தரமில்லாதது. அழியக்கூடியது. அநுபவிக்க வேண்டிய கர்ம பலன்களுக்கேற்றவாறு ஸ்தாவர, ம்ருக, மநுஷ்ய தேஹங்கள் உருவாகிறது.

உள்ளே யுருகி நைவேனை உளளோ இலளோவென்னாத,
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங்கோடும்
அள்ளிப் பறித்திட்டவன் மார்வில் எறிந்தென் அழலைத் தீர்வேனே.
(நாச்சியார் திருமொழி 13-8)

தேஹபரமாக நோக்குங்கால் கொங்கை எனும் பதம் ஸ்த்ரீகளின் ஸ்தனங்களைக் குறித்தாலும், போக வஸ்து என்பதைக் கருத்தில் கொள்ளுங்கால் எம்பெருமான் திருவுள்ளத்திற்கு மிக உகப்பான ஆச்ரித பக்தியினைக் குறித்தது.

கொங்கை = போக வஸ்து = ஆச்ரித பக்தி; கிழங்கு = ஆத்மா

'கொங்கை தன்னைக் கிழங்கோடும்' என்பது ஆத்மா (ஜீவாத்மா) பரமாத்மாவிடம் கொள்ளும் அதீதமான வேட்கையினைக் (பக்தியை) குறித்தது.

அநித்யமான தனது தேஹத்தில் சிறைப்பட்டு அல்லலுறும் ஆத்மாவினை எம்பெருமானது திருமார்பினில் வீசி எறியும்படி கூறுகிறாள் பெரியாழ்வார் புத்ரி. தன்னுள் உறையும் ஆத்மாவினைப் பிய்த்து எறியும் போது கூட அதனை வேறிடத்தே வீசாது (தேவதாந்தர ஸம்பந்தம் இன்றிக்கே) எம்பெருமானிடத்தேயே சேர்க்கச் சொல்வதென்பது இந்தப் பதங்களில் பொதிந்துள்ள விசிஷ்டாத்வைத தத்வமாகிறது. அப்படித் தனது ஆத்மாவானது அவனுடன் கூடுமேயானால் (ஜீவாத்ம பரமாத்ம ஸங்கமம்) தனது துன்பம் நீங்குமென்கிறாள் அவனுடனான கூடல் ஒன்றையே தனது ஏக லக்ஷ்யமாகக் கொண்டவள். இங்கு ஏக லக்ஷ்யமாவது ஆச்ரிதருக்கு எம்பெருமான் மேல் இருக்க வேண்டிய மஹாவிச்வாஸத்துடன் கூடியதான த்ருடமான பக்தியையும் நம்பிக்கையையும் குறித்தது.

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரிநீர்
செய்ப்புரளவோடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்றார்க்கும் எய்தாது நான்மறையின்
சொற்பொருளாய் நின்றாரென் மெய்ப்பொருளும் கொண்டாரே.
(நாச்சியார் திருமொழி 11-6)

இதில் 'மெய்ப்பொருள்' என்பது விசேஷார்த்தத் தினைக் கொண்டது.

1. எம்பெருமானே மெய்ப்பொருள். பரம சேதனன். மற்றனைத்தும் மாயமே.

2. (நாச்சியாரின், ஜீவாத்மாவின்) ஆத்மா அழிவில்லாதது. நித்யமானது. தேஹத்தினை விட வேறானது.

3. மெய் என்றால் தேஹம். வளை என்பது கையில் அணியப்படும் ஒரு அணிகலன். தேஹத்தினை (மெய்யினை) அலங்கரிக்கும் (வளை) பொருள் மெய்ப்பொருள்.

நாச்சியார் திருமொழியின் இந்தப் பாசுரங்களின் மூலம், கர்மானுகுணமாக உண்டாகும் தேஹம் அநித்யமானது. அழிந்து போகக் கூடியது. எம்பெருமானின் சொத்தான ஆத்மாவோ அவனைப் போன்றே நித்யமானது. அழிவில்லாதது என்பதை தெளிவுறக் காண்பிக்கிறாள் நம்மை ஆள்பவனை ஆள்பவள். தேஹம், தேஹத்தில் உறையும் இந்த்ரியங்கள், மனம், ப்ராணன், புத்தி, ஜ்ஞானம் என்று இவை எதுவுமே ஆத்மாவாகாது. ஆத்மா சுத்த ஸத்வம் என்ற ஸத்யத்தினை இந்தப் பாசுரம் மூலம் நிஷ்கர்ஷிக்கிறாள் பூமிப்பிராட்டி.

மாயன் அன்று ஐவர் தெய்வத் தேரினில் செப்பிய கீதையின் செம்மைப் பொருளினை ஆச்ரிதர் உய்யவென உரைத்தாள் கோதை நாச்சியார். எம்பெருமான் தன் திருவாய் மலர்ந்தருளின கீதை ஐந்தாம் வேதம் என்றால் கர்மபத்தர்கள் அனைவரும் உய்ய வேண்டுமென்ற அவாவில் நாச்சியார் ஸாதித்த திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி இரண்டும் பூமிப் பிராட்டியின் கீதோபதேசமே. பூமாலை சூடிக் கொடுத்தவளின் பாமாலைகள் இரண்டையும் நித்தம் அநுஸந்தித்து திருவாடிப்பூரத்து ஜகத்துதித்தவள் பாதம் பணிவோம். பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளை புருஷகாரம் செய்து நம்மைத் தன் தலைவனிடம் சேர்ப்பித்து, ஜன்ம ம்ருத்யு ஜரா வ்யாதி எனும் சங்கிலித் தளையிலிருந்து (நம்மை) மீட்பாள் என்பது திண்ணம்.

ஆடியில் முக்கிய உத்ஸவங்கள்

உத்ஸவம்	நாள்
திருவாடிப்பூரம் - ஆண்டாள் திருக்கல்யாண உத்ஸவம்	ஜூலை 28 (திங்கள்)
ஊர்கோல உத்ஸவம்	ஜூலை 29 (செவ்வாய்)
ஜ்யேஷ்டாபிஷேகம்	ஜூலை 30 (புதன்)
ஆளவந்தார் திருநக்ஷத்ரம்	ஆகஸ்ட் 8 (வெள்ளி)
கஜேந்த்ர மோக்ஷம் (ஆடி கருடன்)	ஆகஸ்ட் 9 (சனி)

ஸ்ரீ:

சிங்கப்பிரான் சீர்மை

ஸ்ரீமதி இந்திரா ரமேஷ், பெங்களூரு

திருமாலின் பத்து அவதாரகளில் நான்காவது அவதாரமான ஸ்ரீ ந்ருஸிம்ஹ அவதாரம் பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. பாகவத ரக்ஷணத்திற் காகவே க்ஷணத்தில் தோன்றிய அவதாரம். ரக்ஷணமே ப்ரதானமாய் அந்த அவதாரத்தின் நோக்கம் இருந்தபடியால் இப்படித்தான் அவதரிக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்படவில்லை.

ஹிரண்யன் தனது அரண்மனையில் உள்ள தூண்களை ப்ரஹலாதனுக்குக் காண்பித்து அவற்றில் எங்கு உளன் என்று வினவ, தூணிலும் உளன் துரும்பிலும் உளன் என்று சிறுவன் ப்ரஹ்லாதன் அஞ்சாது கூற, பக்தனின் வாக்கைக் காப்பாற்ற பகவான் அங்குள்ள அனைத்து தூண்களிலும் தயாராக நின்றிருந்தானாம்.

ஒவ்வொரு அவதாரங்களுக்கும் அவதார நோக்கமும் அவதரிக்க வேண்டிய நிர்பந்தம் நாம் அறிந்த விஷயமே எனில், ''பக்த வாக்ய பரிபாலனம்'' என்ற வாக்கை மெய்ப்பிக்க தன் பக்தனின் ரக்ஷணம் பொருட்டு அந்த க்ஷணத்தில் அவதரித்தான்.

கம்ப ராமயணம் ராமனுக்காக கவிச்சக்ரவர்த்தி கம்பனால் இயற்றப்பட்டது எனினும், ஹிரண்யன் வதைபடலத்தில்

நசை திறந்து இலங்கப் பொங்கி நன்று நன்று என்ன நக்கு
விசை திறந்து உருமு வீழ்ந்ததென்ன ஓர் தூணின் வென்றி
இசை திறந்து உயர்ந்த கையால் எற்றினான் எற்றலோடும்
திசை திறந்து அண்டம் கீறச் சிரித்தது செங்கட்சீயம்.

ப்ரஹ்லாதனின் சொல்லைக் கேட்டுத் தான் கட்டியத் தூணை தன் கையாலேயே பிளந்தான். அக்கணமே சிவந்த கண்ணையுடைய சிங்கமானது அண்டகோளத்தைப் பீறிக்கொண்டு தோன்றியது.

தன் பக்தர்களின் இன்னலைப் போக்க நிதானம் பாராமல் தோன்றிய அவதாரம். இப்படித் தன்னைச் சரணடைந்த ப்ரஹ்லாதனை வ்யாஜயமாகக்கொண்டு அந்த க்ஷணத்தில் தோன்றி நம்மையும் இன்றளவும் ரக்ஷிக்கிறார்.

ஸ்வாமி தேசிகன் தமது தசாவதார ஸ்தோத்ரத்தில்:

ப்ரத்யாதிஷ்ட புராதந ப்ரஹரண
க்ராம: க்ஷணம் பாணிஜை:
அவ்யாத் த்ரீணி ஜகந்த்யகுண்ட மஹிமா
வைகுண்ட கண்டீரவ:|
யத்ப்ராதுர்பவநாதவந்த்ய ஜடரா
யாத்ருச்சிகாத்வேதஸாம்
யா காசித் ஸஹஸா மஹாஸுரக்ருஹ
ஸ்தூணாபிதாமஹ்யபூத்||

''ஸ்ரீ வைகுண்டநாதன் ஓர் அவசரத்தில் அத்புத கேசரியாகி, திருநகங்களையே ஆயுதங்களாகக் கொண்டு, பழைய பஞ்சாயுதங்களையும் புறக்கடைக் கொண்டு ஹிரண்யனுடைய ஓர் அரண்மனைத் தூணில் தோன்றி, ப்ரஹ்மாதிகளுக்கும் பாட்டியாகும் பெருமையை அதற்கு ஈன்று நின்றான். அவன் உலகம் அனைத்தையும் காத்தருளவேண்டும்.''

நரசிம்ஹருக்கு பல்வேறு வடிவங்கள் புகழ்ந்து கூறப்படுகின்றன. அவற்றில் அதி முக்யமானது லக்ஷ்மீந்ருஸிம்ஹ வடிவமாகும். லக்ஷ்மீந்ருஸிம்ஹனை வழிபட்டால் இந்த பிறவியானது அனைத்து வகையிலும் பூர்த்தியாகும். ஆழ்வார்கள் அனைவரும் அவ்வண்ணமே தங்களது மங்காளாசாஸனங்களில் அருளிச் செய்துள்ளனர்.

ஆழ்வார்களால் மங்களாஸாசனம் செய்யப்பட்டவை 108 க்ஷேத்ரங்கள். ஆனால் இவை அல்லாது பல ப்ராசீனமாய் இன்றும் பக்தர்களால் ஸேவிக்கப் படுகின்றன. காட்டழகியசிங்கர், மேட்டழகியசிங்கர், ஆற்றழகியசிங்கர் ஆகியவை இவற்றுள் சில.

இம்மூன்று அரியுருவங்களும், அரங்கன் உறையும் திருத்தலத்திற்கு அருகில் அமர்ந்து நம்மை காக்கின்றனர்.

காட்டு அழகியசிங்கர்

இக்கோவில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர் திருத்தலத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது. சுமார் 8 அடி உயரத்தில், இடது தொடையில் மகாலட்சுமியுடன் ஆலிங்கன நிலையில் பெருமாள் காட்சி தருகிறார். ''என்னை நம்பியவர்களை நான் ஒருபோதும் கைவிடுவதில்லை'' என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த ஸந்நிதி அமைக்கப்பட்டிருக்கலாம். திருமுகம் மேற்கு நோக்கி உள்ளது. விஜயதசமி அன்று, ஸ்ரீரங்கம் பெருமாள் இக்கோவிலில் உள்ள பெரிய மண்டபத்தில் காலை முதல் மாலை வரை எழுந்தருளியிருந்து, பின்னர் குதிரை வாகனத்தில் வீதியில் உள்ள வன்னி மரத்தை நோக்கி அம்பெய்தபின் தெற்கு வாசல் வ்ழியாக மூலஸ்தானம் திரும்புகிறார்.

பண்டைய காலங்களில் இப்பகுதி ஒரு காடாக இருந்தது. காட்டு யானைகளின் தொந்தரவால் அவ்வூரின் மக்கள் பெரிதும் திண்டாடினர். யானைகளை அழிக்கவோ அல்லது அடித்து துரத்தவோ இயலாத நிலையில், அவர்கள் நரசிம்மருக்காக ஒரு கோவில் கட்டி, தொடர்ந்து வழிபாடுகளைச் செய்தனர். அதன் பின்னர் யானைகளின் தொந்தரவு குறைந்ததாகவும், இதனால் இந்நரசிம்மர் 'காட்டழகிய சிங்கர்' என அழைக்கப்படத் தொடங்கினார் என்றும் தலபுராணம் கூறுகிறது.

மேட்டு அழகியசிங்கர்

ஸ்ரீரங்கம் தாயார் ஸந்நிதிக்கு அருகில் ஸ்ரீ மேட்டு அழகியசிங்கர் ஸந்நிதி அமைந்துள்ளது. ஸ்ரீமந்நாதமுனிகளின் அனுக்ரஹத்துடன், கவிச் சக்கரவர்த்தி கம்பர் தனது இராமாயணத்தை இத்தலத்திலேயே முதன்முறையாக அரங்கேற்றினார்.

அதில், விபீஷணன் மஹாவிஷ்ணுவின் மஹிமைகளைப் பேசும் போது, நரசிம்ம அவதாரத்தில் ஹிரண்யன் வதைபடலத்தை எடுத்துரைத்தார் என கம்பர் கூறுகிறார். இதை ஆக்ஷேபித்தவர்களின் குரலை அடக்கும் வண்ணம் பெருத்த கர்ஜனையுடன் அந்த படலத்தை ஆமோதித்து ஸ்ரீ நரஸிம்மர் ஏற்கப் பணித்ததாகவும் பின்னர் அந்த ஹிரண்யன் வதைபடலம் கம்பராமாயணத்தில் சேர்க்கப்பட்டதாகவும் தல வரலாறு குறிப்பிடுகிறது.

ஆற்று அழகியசிங்கர்

காவிரி நதியின் தென்கரையை ஒட்டிய இத்தலத்தில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கோவில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இத்தலத்தில் சோழன்மாதேவி தங்கியிருந்தார் என்பதை இக்கோவிலில் காணப்படும் கல்வெட்டுகள் கூறுகின்றன. பின்னர் சோழ சாம்ராஜ்யம் நாசமடைந்து, அவர்கள் கட்டிய அந்த கோவில் முற்றிலும் அழிந்து, அந்த இடம் விவசாய நிலமாக மாறியது.

ஒருநாள், அந்த நிலத்தை உழுக்கும்போது, ஒரு விவசாயியின் ஏர், பூமிக்குள் புதைந்திருந்த நரசிம்மரின் சிற்பத்தைத் தொட, அந்த மூர்த்தி வெளிப்பட்டதாக புராணம் கூறுகிறது. அவருக்காக கோவில் கட்ட எண்ணியபோது, சிங்கம் கர்ஜிக்கும் ஒலி ஒலித்தது. அது, ‘காட்டு அழகிய சிங்கராக நான் மக்களைத் துஷ்டர்களிடமிருந்து காக்க வருகிறேன். எனது திவ்ய ரூபத்தை தெற்குக் கரையில், சிறிய திருவடிக்கு அருகில் கிழக்கு நோக்கி நிறுவுக’ எனும் அசரீரி வாக்காகக் கருதப்பட்டது. அதன்படி, இக்கோவில் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது.

காவிரியின் ஓடத்துறை அருகில் அமைந்துள்ளதால், இம்மூர்த்தி ‘ஓடத்துறை நரசிம்மர்’ என்றும் அழைக்கப்படுகிறார்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், காவிரி ஆற்றின் மேலாக ஒரு பாலம் அமைக்க திட்டமிடப்பட்டபோது, அந்த முயற்சி தொடர்ந்து தடைப்பட்டதாக கூறப் படுகிறது. ஒருநாள், அந்த ப்ரிட்டிஷ் அதிகாரியின் கனவில் ஆஞ்ஜநேயர் தோன்றி, ‘இக்கோவிலின் கர்ப்பக்ரஹத்தை சீரமைக்க வேண்டும்‘ என கூறிவிட்டு மறைந்தாராம். அதன்படி, அந்த ஆங்கிலேய அதிகாரி கர்ப்பக்ரஹத்தை புதுப்பித்துக் கட்டிக்கொடுக்க, பின்னர் அவரது பாலம் கட்டும் பணி எந்தவிதத்திலும் தடையின்றி வெற்றிகரமாக முடிந்தது. அன்றிலிருந்து, இக்கோவில் ஒரு பிரார்த்தனைத் தலமாக விளங்குகிறது.

பாடலாத்ரி நரசிம்மர்

செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள சிங்கபெருமாள் கோவில் என்று அழைக்கப்படுகிற இக் குடைவரை கோயில் ஒரு சிறிய குன்றின் மீது அமைந்துள்ளது. எட்டாம் நூற்றாண்டில் பல்லவர்களால் கட்டப்பட்டது.

ஜாபாலி என்ற முனிவரின் தவத்திகற்கு இணங்க தனது உக்ர ஸ்வரூபத்தைக் காட்டினாராம். தனது உக்ரம் அடங்க, அக்கோவில் திருகுளத்தில் மூழ்க குளம் சிவப்பாக மாறியதாகச் சொல்லபடுகிறது.

இக்கோவிலின் தனி சிறப்பு, சங்கையும், சக்ரத்தையும் ஏந்தி அமர்ந்த கோலத்தில் மூன்று கண்களுடன் காட்சி தறுகிறார். பக்தர்கள் நரசிம்மரின் மூன்றாவது கண்ணை தரிசிக்கலாம் மற்றும் கிரி வலமும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் முதல் நாமம், பகவான் ஹரியைக் குறிப்பிடுகிறது. அந்த ஹரி நரஹரி என்று ஆசார்யர்கள் விளக்கம் அளித்துள்ளனர். ‘ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்’ என்றபடி எங்கும் உறைபவன் பகவான் விஷ்ணு. அவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான். அவனே நரசிம்மன். நரசிம்மரை பிரார்த்தித்த உடனேயே அருள் புரிபவன்.

ஸ்வாமி நம்மாழ்வார் கூறியது போல ‘... உடல் மிசை உயிரென கரந்து எங்கும் பரந்துளன்.’

கோதை நாச்சியார், கண்ணனை நரசிம்மரைப் போல வரவேண்டும் என்று தனது திருப்பாவை பாசுரத்தில் (23) கூறுகிறார்:

மாரி மலை முழ்ஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீறிய சிங்கம் அறிவுற்று தீவிழித்து
வேரி மயிர்க பொங்க எப்பாடும் போர்ந்து தறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா! உன்
கோவில் நின்றும் இங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த காரியம்
ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்.

நரசிம்மர் தன்னை நம்பிக்கையோடு வேண்டியபடியால் பாகவத ரக்ஷணத்திற்காகத் தோன்றி தன் பக்தனான ப்ரஹ்லாதனைக் காத்து அருளினார். அவனைப் போலவே நம்பிக்கையோடு நரசிம்மரை வேண்டிக் கொண்டால், லக்ஷ்மீந்ருஸிம்ஹனாய் ஓடி வந்து நொடிப்பொழுதில் நம் துன்பத்தை தீர்ப்பான் என்பதில் ஒரு துளியும் ஐயமில்லை.

அரி என்ற பேரரவமானது நாளை என்ற பேச்சுக்கே இடமில்லாமல் உடனே நம்மைக் காப்பாற்றும்.

ஸ்ரீ:

Important Tenets Of Our Sampradaya (28)

Remembering Yaamuna Muni, The Path-Breaker

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

If our Sri Sampradaya – with special reference to the Doctrine of Saranaagathi – can be likened to a solid fort-like edifice erected by Swami Desika, it is chiefly because it stands on the beams and pillars so assiduously and expertly raised by Bhagavath Ramanuja upon the foundation laid by Sri Aalavandhar.

Aalavandhar (named Yamunai-Thuraivan/ Yaamunacharya) was the grandson of Nathamunigal and the son of Iswaramunigal. His legacy to our Sidhdhantha is of far greater magnitude than one would imagine. His Chathu-Sloki and Sthothra Rathnam are philosophy-defining works which Emperumaanaar and Thooppul Pillai used to great effect in establishing the supremacy of Sriman Narayana, and with that the Visishtaadvaita.

We shall very briefly recapitulate the great Acharya's life-sketch.

He was born in 917 CE corresponding to the year Dhathu in the month of Aadi under the constellation of Uththiraadam on a Friday in Kaattumannar Kovil. He grew up as an intelligent young man and mastered all the Saasthras under the tutelage of one Mahabhashya Bhattar. Once when his master was challenged by a royal chaplain called Akkiyaazhwan, Yaamunacharya took up the gauntlet and offered to vanquish the haughty scholar.

So did the young man in the debate of logic and got half the kingdom as promised by the king at the insistence of the queen, who hailed the young man as 'Aalavandhar'. After a few years of royal life, he realised through Manakkaal Nambi that he was destined for greater things, took to Sanyasa and accepted the spiritual throne earlier adorned by Nathamunigal.

Sthothra Rathnam literally means a gem among hymns. It is interesting to note that apart from this salutary name, and the other name 'Aalavandhar Sthothram' — one derived from the authorship — no given name is attributed to this hymn. Just as Vishnu Puraanam is hailed as 'Puraana Rathnam' and the 'Dhvayam' as 'Manthra Rathnam', this hymn of Aalavandhar is celebrated as 'Sthothra Rathnam'. Very fittingly, Yaamunacharya refers to the 'Puraana Rathnam' in the fourth sloka of his own hymn which is regarded as an elaboration of the 'Manthra Rathnam'.

The 'Gem among Hymns' is,no wonder in fact, an assembly of 64 gems (slokas). The author begins the work with invocation to Nathamunigal in the initial three slokas, salutes Sage Parasara in the fourth and bows to Nammazhwar in the fifth. He even indulges

in salutation in jest to himself for shamelessly attempting the impossible of singing the praise of the Lord's feet in Sloka No. 7, before embarking on the main task.

From then on it is a virtual feast with the menu comprising delicious mix of the Lord's great virtues, the glory of His feet which are both the means and goal, Thathva-thrayam, Rahasya-thrayam, Anjali Vaibhavam, Prapaththi Saasthra and its five mandatory elements, Naichyaanusandhaanam (self-deprecation), and so on. It is amazing that so much could be packed in 64 slokas. No wonder Swami Desika has not only written a wonderful Sanskrit commentary on Sthothra Rathnam but also drawn comprehensively from this masterpiece to shore up our philosophy, especially in Srimath Rahasyathraya Saaram and very many of the Chillarai Rahasyangal.

We shall see the meaning of a handful of landmark slokas from this splendid hymn of lilting meters.

The prayer with folded hands even if done howsoever and by whosoever and even once, immediately erases all the sins and grants auspicious things in their entirety (Sloka No. 28).

Thrivikrama! The Conch, the Discus, the Flag Mast, the Lotus, the weapons – Goad and Thunderbolt… they are all the palm lines of Your lotus feet. Pray, when will it adorn my head? (Sloka No. 31).

O! Hari! I am the receptacle of countless sins and have fallen into the dreadful worldly ocean. I am helpless and not interested in any other means but have surrendered unto You. Pray, save me and make me Your own. (Sloka No. 48).

To the entire universe, only You are the father, mother, beloved son and friend, relative, master and refuge. I am Your servant and someone that has to be nurtured by You. I have surrendered unto You and hence am Your responsibility (Sloka No. 60).

I am a callous person engaged in menial pursuits, fickle-minded, source of jealousy, ungrateful, full of ill-feelings, drenched in sensual pleasures, adept cheat, brutal being and incorrigible sinner. How can I wriggle out of this ocean of sorrow and reach Your feet and serve them? (Sloka No. 62).

The great Acharya's Thirunakshathram (Aadi-Uthiraadam) falls on August 5. The best way to celebrate the same will be by remembering him and remaining grateful to him for his compassion and magnanimity in gifting us such a great work. Even better we could recite the hymn, particularly with proper understanding of the meaning.

Swami Desika, in his Prabandham Adhikaara Sangraham, dedicates the fifth Paasuram to Aalavandhar, which we shall recall on this occasion:

நீள வந்து இன்று விதிவகையால் நினைவொன்றிய நாம்
மீளவந்து இன்னும் வினை உடம்பு ஒன்றி விழுந்து உழலாது
ஆளவந்தார் எனவென்று அருள் தந்து விளங்கிய சீர்
ஆளவந்தார் அடியோம் படியோம் இனி அல்வழக்கே.

"After the vicious cycle of innumerable births and deaths, we have been fortunate to be born as servants of the majestic Aalavandhar and learn his works to be rid of our miseries. So, we shall never read works related to other faiths."

(to be continued…)

ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.

முகவரி மற்றும் விவரங்களுக்கு:

'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

நிர்வாகம்:
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.

ஸ்ரீ:

Srimath Rahasya-Thraya Saaram

A Manual For Beginners (28)

Smt. Padmalatha Sridharan, Chennai

Chapter – 27

Moolamantra Adhikaram

Swami explains in detail about Ashtakshara mantra in this chapter.

Ashtaksharam is the first Rahasya in the Rahasya-traya and the etymology of it is being explained in detail. Since there is a lot of Sanskrit grammar involved, I shall briefly encapsulate the overall concepts explored thoroughly by Swami Desikan. These should be learnt properly under the auspices of a Kalakshepa Acharyan only.

Thirumantram elucidates the Paratvam of Isvara in the first word (Pranavam), the Upaayam and Praapyam in the second and third words (Nama:, Narayanaya). Dvayam is but an expansion of the above and Charama slokam expands on the above along with Adhikari Visesham, non-requirement of anything else, destruction of sins, etc. Thirumantram is thus sustenance, Dvayam nurturing and Charmaslokam cherishable. Thirumantram is the ultimate mantram which contains within it all concepts, Tatvas, means, purpose, benefit, etc., and celebrated by Azhwars, Acharyas, Rishis, and so on.

If we leave out the Pranavam and the 'Aaya' sabdham in the third word, then the mid-portion is eligible to be chanted by all people, as told in Varaha puranam. Even without Pranavam, the phalan of the full mantra is assured for those Adhikaris for whom Pranavam is not chantable.

Now Swami proceeds to dissect the mantra and explain the words and the hidden meanings from all angles. Pranavam alone is used for Mokshartha Athma Samarpanam in Nyasa Vidya.

Pranavam is Ah, Uh, and Ma (அ, உ, ம). 'Ah'kaaram denoted Paramathma and that He is the primal Cause and Protector of this world ensues from this. ('A'kaarena uchyathe Vishnu:) Just as all sounds are born from Ah, all the world is born from Him, and He is omnipotent and omniscient. The letter

denotes the Mithunam (dual) of Perumal and Piratti and the consort is praapyam too in all Vidyas. There is a hidden fourth case upon the 'Ah'kaaram and grammatically it denotes the sesha-seshi bhavam of Jeevan to Bhagavan and it converts to swami-dasa bhavam for chetanas leading to kainkaryam. The 'Uh'kaaaram denotes that the chetana is not sesham to anybody else except the Divya Dampathi. But it does not preclude Bhaagavata seshatvam. 'Ma'kaaram denotes the Jeevan and in Sanskrit letters it is the 25th and hence after 24 Prakruti Tatvas, Jeeva is the 25th and thus fitting. This has three meanings as per grammar - 'mana jnaane' - jeeva svarupa is jnaanam. 'Ma avabodhane' - jeeva has the attribute of jnaana, 'ma si parimane' - jeeva is atomic.

The second word 'nama:' denotes Bhagavan's protectionism and Jeevan is daasa or servant of Bhagavan who is Swami or master. A master can depute his servant to anyone he likes and thus Bhagavan deputes a Jeeva to be a Sesha to other Bhaagavathas. The nama: sabdam signifies prayer to Bhagavan to accept the athma saying "I am not mine. Nothing is mine. Everything is yours". Swami goes on to quote Ahirbudnya Samhitha which gives ten different grammatical interpretations for this word to establish seshatvam.

Narayana sabdam is the expansion of 'A'kaaram. It is celebrated in puranas and by Azhwars as equal to Pranavam. This sabdam can be explained in two

நம் திருக்கோயிலில் நடை பெறும் உத்ஸவங்களின் தொகுப்பினை நேரலையில் அல்லது பதிவு செய்து காண உருவாக்கப்பட்ட ப்ரத்யேக சேனல்.

இன்றே SUBSCRIBE செய்யுங்கள்

ways "Naraahaa ayanam yasya" and "Naaranaam ayanam". 'Naaram' means from which arose Tatvaas. (Narajjathaani tatvaani). Ayanam means pervaded. So, He pervades all beings which is Vyapakatvam. Naaraanam ayanam means all sentient beings called naaraas (indestructible) reside in Him. This is aadhara-aadheya bhavam which can be loosely termed as holder-held.

Bhagavan is shown as Protector, Primal cause, Eternal, Masterful, Holder, and the Insider in every being and Jeevan as Eternal, Atomic, pervaded, etc., from these interpretations. "Naaram" can also denote non-sentient beings since their original form, moola prakruti, is indestructible.

Swami says from the etymology of these words, it is clear that oneness can never be possible between Jeeva and Isvara and those arguments advocating the same are to be dismissed summarily.

The 'Aaya' sabdam in final word denotes that every being exists for Him.

The three main concepts to be repeatedly meditated upon from Thirumantram are Ananyarha seshatvam (I am a sesha only to You), Ananya Upayatha (You are my only means and Ananya pumarthatha (only You are my goal to be attained).

Swami goes on to give ten interpretations for Thirumantram taking it as one word, two words and three words.

Pranavam shows subservience – bhagavath seshatvam, namo sabdam shows utmost dependence - paarathanthriyam and narayanaya is kainkaryam, and because the first two extends to bhagavathas, kainkaryam is for both Bhagavan and bhagavathas.

Some people raised the question that once adverse benefits are gone, automatically desired benefits would result and why should that be requested for in namo sabdam? Swami clarifies that removal of adverse effects might result in benefits of mixed nature too generally in this world and hence eternal benefits are requested specifically.

In Thirumantram, the first word denotes Svarupam, the second word Upayam and the third word Purushartham. This is the interpretation most favoured by Acharyas.

Swami then extols Thirumantram -- it enlightens Mumukshus, saying it once is equal to repeated japam or repeated chanting of vedas, it was propagated by Sriman Narayana Himself and thus only He knows it's greatness fully. Finally, Thirumantram begets all phalan and nothing is impossible for it, and it is to be chanted as per adhikaram for athma guna poorthi.

(to be continued…)

ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,

4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,

மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

பெரியாழ்வார் திருநக்ஷத்ரம் - ஆனி கருடன்

பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்



வெள்ளிக்கிழமை உத்ஸவம்